**செய்தி வெளியீடு எண்: 129** **நாள்: 14.02.2020**

செய்தி வெளியீடு

**முதலமைச்சர் கணினித் தமிழ் விருது**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், "தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகமெலாம் கணினி வழித் தமிழ் மொழி பரவச் செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் முதலமைச்சர் கணினித் தமிழ் விருது என்ற பெயரில் விருது வழங்கப்படும். விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் 1 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும்" என 14.5.2013ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண் 110 ன் கீழ் அறிவித்தார்கள்.

அதன்படி ஆண்டுதோறும் சிறந்த மென்பொருள் தெரிவு செய்யப்பட்டு மென்பொருளைத் தயாரித்த தனிநபர் / நிறுவனத்திற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களால் விருது வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டு (2019) முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு தனியாள் மற்றும் நிறுவனத்திடமிருந்து, தமிழ் வளர்ச்சிக்கான மென்பொருள்கள் வரவேற்கப்பட்டு, விருதுக்கான விண்ணப்பம் வந்த சேரவேண்டிய இறுதி நாள் 31.01.2020 என ஏற்கெனவே செய்தி வெளியிடப்பட்டது.

தற்பொழுது விருதுக்கு விண்ணப்பிக்கும் காலம் 29.02.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. போட்டிக்கு அனுப்பப்படவுள்ள மென்பொருள்கள் 2016, 2017, 2018ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித்துறையின் வலைத்தளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விருதுக்கான விண்ணப்பம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு
வந்து சேர வேண்டிய இறுதி நாள் 29. 02. 2020


அனுப்ப வேண்டிய முகவரி
தமிழ் வளர்ச்சி இயக்குநர்
தமிழ் வளர்ச்சி வளாகம்
தமிழ்ச் சாலை, எழும்பூர்
சென்னை - 600 008
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்: 044 28190412, 044 28190413
மின்னஞ்சல் : tamilvalarchithurai@gmail.com
வலைத்தளம் : www.tamilvalarchithurai.com


**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**